செ.வெ.எண்: 75 நாள்: 28.01.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தை காசநோய் இல்லாத மாவட்டமாக மாற்ற நடவடிக்கை.**

**துப்புரவு பணியாளர்களுக்கான காச நோய் கண்டறியும் முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டத்தின் சார்பில் நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கான காசநோய் கண்டறிதல் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.01.2020) துவக்கி வைத்தார். இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

புதுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 42 வார்டுகள் உள்ளன. நகராட்சி பகுதிகளில் சுமார் 1.50 லட்சம் பொது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நகராட்சி வார்டுகளில் தினமும் சேரும் குப்பைகளை அள்ளி தூய்மைப் பணிகளை துப்புரவு பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இப்பணிகளில் 226 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், 200 தற்காலிக துப்புரவு பணியாளர்களும் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

துப்புரவு பணியாளர்கள் பாதுகாப்பாக துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் வகையில் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் காசநோய் இல்லா புதுக்கோட்டை- 2025 என்ற கொள்கையின் அடிப்படையில் மாவட்டத்தில் காசநோய் கண்டறியும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் 200 துப்புரவு பணியாளர்களுக்கு காசநோய் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. காசநோய் பரிசோதனையின் முடிவுகளை 2 மணிநேரத்திற்குள்ளாகவே வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காசநோயை கண்டறியும் சளி பரிசோதனை செய்யக்கூடிய 54 சிறப்பு நுண்ணோக்கி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 18,289 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 1,038 காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். பழைய அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட காசநோய் மையம் செயல்பட்டு வருவதுடன்

காசநோயாளிகளுக்கு தரமான அனைத்து சிகிச்சைகளும் விலையில்லாமல் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 2 வாரங்களுக்கு மேல் சளியுடன் கூடிய இருமல், மாலை நேரக் காய்ச்சல் உடல் எடைக் குறைதல், பசியின்மை, இரவில் வியர்த்தல், சளியில் இரத்தம் கலந்து வருதல் போன்ற அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று இருந்தாலும் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளை அணுகி சிகிச்சை பெற வேண்டும். இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தை காசநோய் இல்லாத மாவட்டமாக உருவாக்கிட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர்.மரு.சந்திரசேகரன், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மருத்துவர்கள், துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**